
# இலக்குத் தெரிகிறது



தூயவன்

# இலக்குத் தெரிகிறது


தூயவன்

92960

வெளியீட்டுப் பிரிவு,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.

320.51


| | | |
|---|---|---|
| இலக்குத் தெரிகிறது | – | தூயவன் (சி.தனேஸ்குமார்) |
| முதற்பதிப்பு | – | சித்திரை 1993 |
| வெளியீடு | – | வெளியீட்டுப் பிரிவு, தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழீழம். |
| அன்பளிப்பு | – | ரூபா 20/- |

## என்னுரை

92960

என் உள்ளத்து உணர்வுகள் எழுதுகோலின் உதவியினால் உருப்பெற்றபோது உருவான வரிகள் இவை.

இலக்கண வரம்புகளால் வரையறுக்கப்படுவதை இவை வரவேற்க மறுத்தன.

ஏனெனில் உணர்வணை உடைபட்டதனால் அள்ளுண்டு வந்த சொற்கூட்டங்கள் இவை.

கல்லூரியிலும், பயிற்சிப் பாசறையிலும் எனது நண்பர்களும் ஆசிரியர்களும் கொடுத்த ஊக்கமும்; கூடநின்ற போராளிகள் களங்களில் வீரமரணத்தைத் தழுவிக்கொண்டபோது ஏற்பட்ட உணர்வுகளும் உலக நிகழ்வுகளின் உறுத்தல்களும் என் மனதில் செலுத்திய செல்வாக்கின் பிரதிபலிப்பே இத்தொகுதி.

தமிழீழ சுதந்திர தேசமொன்றை நிறுவுவதற்காகத் தம்மை அர்ப்பணித்த மாவீரர்களின் உதிரத்தால் நனைந்து சிவந்த இப்பூமியில்நின்று மலரும் இம்மலரை, இவர்களின் கல்லறைகளுக்குக் காணிக்கையாக்குகின்றேன்.

— **தூயவன்**

# அணிந்துரை

நெஞ்சில் ஈரமுள்ள எல்லோரும் நல்ல கவிஞர்களே. தன் கண்ணெதிரே காணும் அழகையெல்லாம் எவர் ஆராதிக்கிறார்களோ அவர்கள் எல்லோரும் கவிஞர்களாகலாம்.

அஞ்சாமை உணர்வு எவரிடம் அதிகமாகவுள்ளதோ, அவர்கள் கவிஞர்கள் ஆவதற்குத் தகுதியுள்ளவர்கள்.

விடுதலை உணர்வு மேலோங்கி எவரெவர் எல்லாம் போராட்ட இறக்கைகட்டிப் பறக்கத் துடிக்கின்றார்களோ அவர்கள் எல்லாம் கவிஞர்களாவதற்கு முன்னுரிமை உடையவர் ஆகின்றார்கள்.

கவிதை எழுதுபவர்கள் மட்டும்தான் கவிஞர் என்றில்லை. மேற்குறிப்பிட்ட உணர்வுடன் ஒருவரிக் கவிதைகூட எழுதாது கவிதையே வாழ்வாகி, அடுத்தவருக்கும் தெரியாது எம்மிடை இருந்து போனவர்கள் ஏராளம் இன்றும்

எமக்கே தெரியாது எம்முடன் வாழ்பவர்கள் ஏராளம் ஏராளம்.

இலக்கிய வடிவங்களுக்குள்ளே போராட்டத்துடன் மிக நெருக்கமானதும், இறுக்கமானதுமான பிணைப்பை அன்றிலிருந்து இன்றுவரை கொண்டிருக்கும் வடிவம் கவிதையே தான். இதனாலேதான் உலகமெங்கணும் நாமறிந்துள்ள விடுதலைப் போராட்டங்களுடன் ஒப்பற்ற பல கவிஞர்கள் ஒன்றிணைந்து நின்றுள்ளனர்

தன்னுணர்வு சார்ந்த இலக்கிய வடிவம் கவிதை என்பதால், நின்ற இடத்திலேயே ஒருவனை நெருப்பாக்கிக் கொதிக்கவைக்கக்கூடிய தன்மை கவிதைக்கே உரித்தாகி விட்டது. ஒப்பனை, அரங்கு, ஒத்திகை, ஆர அமர இருந்து பார்க்கவேண்டிய அவசியம் எதுவும் கவிதைக்குத் தேவையற்றதாகையால் இந்த நினைத்ததும் உணர்வேற்றும் தன்மையுள்ள கவிதை மக்கள் மனங்களைச் சென்று படிவதில் வெற்றி கண்டுள்ளது.

எமது தமிழீழ விடுதலைப் போராட்டமும் உலகக் கவிதையோட்டத்துடன் ஒத்திசைந்து, முன்னரே கவிஞர்களாக இருந்தோரை இணைத்தும், போரென்று களத்திலே குதித்துப் போராளியானவர்களுக்குள்ளே புதிய கவிஞர்களை உருவாக்கியும், மற்றைய விடுதலைப் போராட்டங்களுக்கு எந்தவிதத்திலும் குறைவில்லாது சமாந்தரமாகியுள்ளது.

எமது விடுதலை இயக்கத்தின் தலைவரே ஒரு கலைஞராக இருப்பதாலும், அவர் கவிதா லயிப்பு வாய்க்கப் பெற்றதாலும், புலிகளுக்குள்ளே புதிய புதிய கவிஞர்கள் புலர்வது அதிகமாகிக்கொண்டிருக்கிறது. இந்தப் போராளிக் கவிஞனான தூயவனுக்கும், போகும்பாதையில் தெளிவும், வழிகாட்டிமீது நல்ல நம்பிக்கையும் உண்டு உலகமே வியக்கும் எங்கள் தலைவனை பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு ஒரு காவியமே பாட நினைத்த தூயவனுக்கு, தொடங்கிய பிறகே சிரமம் புரிகிறது. அழகைப்பாடுவதானால் அதை எங்கிருந்தும் ஆரம்பிக்கலாம். ஆனால் ஆற்றல், துணிவு, வீரம், தளராமை, விலைபேச முடியாதவியத்தகு உறுதியெல்லாம் இணைந்த ஒரு தோற்றத்தை எதிலிருந்து பாடத் தொடங்குவது



என்று திகைக்கிறார். அந்தத் திகைப்பின் வெளிப்பாடாகத்தான்,

“உன்னைப் பாட நினைத்தேன்
உடனே
திகைத்தேன்
உன்னில்
முதலில்
எதைப்பாடவென ...”

என்று, ஆறுவரிக்குள் தலைவனை அழகாகக் காட்டிவிடுகின்றார். சிறீலங்கா அரசின் வதை முகாமான பூசாவை பேசாதவாயில்லை என்னும் அளவுக்கு, எல்லோரும் எழுதியும் பாடியும் விட்டபோதிலும், தூயவன் பூசா வதை முகாமை

“குஞ்சுகளுக்காய்
கூடுகட்டல் குற்றமென
கூட்டில் அடைக்கப்பட்ட
குருவிகள்...”

என்று புதிய கோணத்தில் கவிதைப் படம் வரைந்துள்ளார்.

எவருடைய இதயத்தில் ஈரம் கசிகிறதோ? இறகுபோல் மென்மையான மனம் எவருக்குண்டோ? காற்றைப்போல் சுதந்திரமான உள்ளம் யாருக்கு இருக்கிறதோ? அவர்கள்தான் தன் இனத்துக்காகவோ, நாட்டுக்காகவோ போராடத் துடிப்பார்கள். அந்தத்துடிப்பே அவர்களை விடுதலைப் போராளியாக்குகின்றது. தூரத்தில் வைத்துப் பார்க்கும்போது இவர்கள் நெருப்பாகத் தெரிந்தாலும், மூச்சுப்படும் அண்மையில் முன்னிறுத்திப் பார்க்கும்போது இந்தப் போராளி நெருப்புக்குள்ளே ஒரு நீரோடை குதிப்பதையும், ஆயிரம் பூக்கள் மலரும் ஒரு ஆனந்தப் பூஞ்சோலை விரிந்து கிடப்பதையும் காண முடியும். இதைத் தம்பி தூயவன் மிகவும் அழகாக வார்த்தைகளால் வடிவமைத்துக் கவிதையாக்கியுள்ளார்.

தாமரை இதழ்
மென்மை யென்பர்
இல்லை
தாமரையாள் மேனி
சிறப்பென்பர்.
இவர்கள்
போராளி மனம்
அறியார்.

கவிஞர் தூயவன், களத்தில் நின்று போராடும் போராளி. விடுதலையை அவாவி நிற்பவர். அத்துடன் மற்றவர் கண்களுக்குப் புலப்படாத பக்கங்கள்கூட இவர் பார்வைக்குப் படுகின்றன. கவிதைக்கு மரபு, புதிது என்று இல்லாதது போல கவிஞர்களுக்குள் பழைய, புதிய கவிஞர்கள் என்றும் இல்லை. தூயவன் நல்ல கவிஞனாக நாடறியப் போகின்றவர் என்பதற்கான அறிகுறிகள், இந் நூலில் அதிகமாகத் தென்படுகின்றன இதை ஆரம்பமாகக்கொண்டு இவரின் பயணம் தொடரவேண்டும்...... தொடர்ந்தும் கவிதையுடன் இவரின் பழக்கம் அதிகரிக்க, அதிகரிக்க, தமிழீழம் நல்ல கவிஞனொருவனைப் பெற்றுக் கொள்ளும்.

வளரும் முளைக்கு வாழ்த்துக்கள்

— புதுவை இரத்தினதுரை



## வரலாற்றில்

வரலாற்று
ஏடுகளைப் புரட்ட
எண்ணினேன்
ஆனால் அவை
மறுத்து விட்டன.
காரணம் ......
தலைவனே
உனக்கு
நிகராய் தன்னில்
எவரும் இல்லை
என நான்
எள்ளிநகையாடி
விடுவேனாம்.

மாநகராட்சி மன்று
-1-6-1993
யாழ்ப்பாணம்

## திகைத்தேன்

உன்னைப் பாட
நினைத்தேன்;
உடனே
திகைத்தேன்—
உன்னில்
முதலில்
எதைப் பாடவென.

## ஏக்கம்

இளங்கோ ......
கம்பன் ......
பாரதி ......
எனச் சில
நூற்றாண்டு
இடைவெளியில் தானே ......
வந்தனர் பெரும்
திருப்புமுனைக் கவிகள்
இதனால் ......
நாயகனே உன்னைப்
பாட இப்போது
மாகவியாய்
யாருமில்லையே
என்னும் ஏக்கம்
என்னை வதைக்கிறதே!



## பதிலடி

வீதி வெடிக்கும்
மரம் வெடிக்கும்
நின் பாதம்
படும்இடமெலாம்
வெடிக்கும்;
எம்மக்கள்
அனுமதியின்றி
வருவோர் விதி
முடிக்கும்
இவை ......
ஈழம் கொடுக்கும்
பதிலடிகள்!

பொதுசன நூலகம்
மாநகராட்சி மன்று
-1-6-1993
யாழ்ப்பாணம்
2823 C

# மீண்டும் இராசாதித்தன்

கடலை என்கால் வருட
கடும் குளிர் காற்று உடல் வருட
கண் விழித்துக் காவலிருந்தேன்
அந்நியன் கலமேதும் தெரியுமென்று
தூரத்தே ஒரு படகு
உறுத்தியது என் விழிகளில்
பரபரப்பான நான் பாரமிகு
துப்பாக்கிதனை சுடுநிலைக்கு
தயாராக்கிக் கொண்டே காத்திருந்தேன்
காலமின் நிலைக்குரிய
கப்பலதுவன்று போர்புரி
கலமுமிதுவல்லவென
கண்டுசற்றே சாந்தமுடன்
அதை நோக்கி நின்றேன்
தூரநோக்கிதனை எடுத்து
துருவி ஆராய்ந்தேன்
இப்படியும் நிகழுமோவென
எண்ணி வியப்புற்றேன்
பாய் மரமதில் விரிந்திருக்க
பட்டத்து யானையது போல்
பழங்காலக்கலமது
பார் நோக்கிவருவது கண்ணுற்றேன்
தெட்டத்தெளிவாய்த் தெரிந்தது
அதன் உச்சியிலோர் கொடி
பட்டொளி வீசிப் பக்கமாய்ப் பாயும்
புலிக்கொடியது படபடத்தது
வந்தகலம் பாதி வழியில்



பாய் சுருக்கி நின்றதனால்
என் மனம் ஆவல்கொண்டு
ஏக்கமாய்ப் பார்த்து நின்றது
தாய்க்கலமதிலிருந்து
சேய்க்கலமொன்றிறங்கி
ஒருவனுடன் கரைநோக்கி
நகர்வது கண்டு எல்லையிலா
வியப்புக் கொண்டே இருப்புக்
கொள்ளாமல் நிற்கையிலே
இக்கரை நோக்கியவன் இயல்பாய்
இறங்கி வரும் வேளையிலே
கதிரவன் கதிர்கள் பட்டு
காளையவன் அணி முடியினின்று
தெறிப்புற்று வந்த கதிர்களால்
இக்கரை மணல்கூட
செந்நிறமுற்றது கண்டேன்
என்முன்னே வந்து அவன்
நின்றே புன்சிரிப்பொன்றை
தன்முகமதில் பரப்பினான்
தலைதனிலே தணல் நிகர் முடி
நுதல்தனிலே ஒரு திலகம் அதன்
பக்கம் தீர்க்க ஒளியுடை கண்கள்
ஊடுருவி ஆராயும் நிலையுடையவை
கூரான நாசியுடன் கூர்வாள்
நிலையுடை மீசை
விரிந்திருக்கும் மார்பது
அணிந்திருக்கும் கவசமது
நீண்டிருக்கும் கரமது
அருகிருக்குமிடைதனை

அணிசெய் வளைமுனையுடைவாள்
இவையெலாம் கண்டு உளம்
பறிபோய் நின்றேன்
எனை யாரென? அவன் வினாவிட
யான் சொன்ன பதிலால்
தன் கரம் குவித்து மதிப்புடன்
வந்தனம் எனக் கூறி
தன் உதடசைத்தான்
ஏன் இங்கு வந்தீர் என
விநயமுடன் வினாவிட
தானாண்ட தன் இனமாண்ட
தன்னாட்டினில் தனக்கோர்
இடமில்லையெனத் தடுமாறி
நின்றவேளை தமிழ் மறவன்
இந்நாட்டில் இருப்பதறிந்து
முன்னம் நான் கொண்ட
நன் ஈழப் புவியதில் நற்றமிழ்
திண்ணமுடன் வாழ் நிலை
கண்டு அதன் காவலன் தனை
வாழ்த்திச் சென்றிடவெண்ணி
வந்தேனிங் கென்றுரைத்தான்
என்னிலை மறந்துதான்
எம்பிக் குதித்த வேளை
நல்லதோர் நித்திரை
என்னை விட்டகன்றதுவே!



# விஞ்ஞானம் வெறி கொண்டால்

உலகம் தோன்றியது, உயிர்கள் தோன்றின
கூர்ப்பு நிகழ்ந்தது, புத்தி கூர்மை பெற்றது
மனிதன் முந்தினான் மற்றவை பிந்தின
மனிதன் பெற்றான் மாண்மிகு பகுத்தறிவுதனை

அறிவினால் ஆராய்ந்தான் அனைத்தையும்
அதனால் உருவாகியது விஞ்ஞான உலகம்
உயிர்தனைக் காத்திட உறுதி பூண்டான்
உணர்ந்து கொண்டான் விஞ்ஞான உறுதிதனை

கண்ணை இமை காப்பது போலத் தன்னை
காத்திட கவசமாய்க் கொண்டான் விஞ்ஞானமதை
காலம் மாறியது கண்ட கனவு நனவாகியது
ஆயினும் நினைவுகள் நிலைக்கவில்லை நீண்டகாலமிங்கே

-1-6-1993

அறிவியல் அறிஞர் தோன்றினர் உலகம் ஆனந்தமாகிட
ஆனால் நிகழ்ந்ததென்ன?
அறிஞர் பலர் அறிவிலிகள் ஆயினர்
அவரவர் சுயநலத்திற்கு அடிமையாகினர்

கலிலியோ ஊசலின் இயக்கமதைக் கவனித்தான்
காரணம் தனைக் கண்டறிய காலமதைக் கழித்திட்டான்
கண்டான் அப்பிள் கனியின் வீழ்ச்சிதனை ஐசாக்நியூட்டன்
காரணம் புவியீர்ப் பென்றான்

டைனமைற் கண்டு பிடித்தான் பாதையமைத்திட
ஆனால் அதுவோ பாசக் கயிறுதனை வீசியதுவே
டார்வின் கண்ட கூர்ப்பு இங்கே
தன்னினத்தைத் தகர்த்திட உதவியதோ?

விஞ்ஞானமென்று வீழ்ந்தடித் தோடினோம்
வீணாக வீழ்ந்து விட்டோம் படுகுழிதனிலே
வாழ்வு இனி வசந்தமென்றெண்ணினோம்
வானிடிந்து வீழ்ந்தது போலன்றோ விளைவு மாறியது

அறிவியலில் மலர்ச்சி அதனால் அறிவுலகிற் புரட்சி
அயனமண்டலம் தாண்டி அடுத்த கிரகமும் அத்துபடி
ஆனால் ஆனதென்ன அகில பிணக்குத்தீர்ந்ததுவா
அதற்கும் ஒரு வழி கண்டார் ஐன்ஸ்டீன்
அணு குண்டுதனைக் கண்டு பிடித்து

மனிதன் இருந்தால் தானே பிணக்கு
மாண்டு விட்டால் பூண்டோடு
மீட்சியென்றெண்ணினார் போலும்
$E=Mc^2$ என்றார் இழப்புகளை வர்ணிக்கத் தவறிவிட்டார்

நரகங்களாயின நகரங்கள் ஹிரோசிமா நாகசாகி
நாயை ஒத்தஉன் நாணமற்ற செய்கையினாலே
நாகரீகம் கொன்றவனே கொடூரம் கொண்டவனே
கொல்லவில்லையா உன் இதயம் உன்னை இன்னும்

இரசாயனவியல் என இன்பமாய் ஆராய்ந்தோம்
இரவிரவாய்; இறுதியில் நிகழ்ந்தது என்ன?
விதிகள்பல நிறுவப்பட்டன பலவிதிகளும் நிர்ணயமாகின
ஈனமின்றி உயிர்பல கொன்று குவித்திட
கண்டு பிடித்தோம் இரசாயனக் குண்டுதனை
இதற்காகவோ இரசாயனமென ஆராய்ந்தோம்
இனிய காலமதைக் கழித்து



உயிரியலில் உந்துவேகம் பெற்றோம் உற்சாகமாகினோம்
ஊனங்கள் பல மாற்றிட உறுதி பூண்டோம்
உயிர்களெத்தனை பறித்து விட்டோம் இதற்காக
உண்மை நிலைமாறியதா? இல்லை
உருவாகிய 'எயிட்ஸ்'தனை உணர்ந்து கொண்டோம்

மனிதனுக்காக மரணிக்கின்றன மற்ற உயிர்கள்
மன்னிக்கவும் மரணிக்கச் செய்கின்றோம்
மானுட மீட்சிக்காய் என்கிறோம் மொத்தத்தில்
மனிதாபிமானம் இங்கே மரணித்து விட்டதுவோ?

கன்னி உன்னைக் கண்டாலே கண்ணடிக்கத்தோணுமென
கவிகள் பல பாடிவிட்டோம் ஆனால் கைபிடித்தபின்
கருக்கலைக்க கருவிபல செய்து விட்டோம்
உயிரியலில் உந்து வேகம் பெற்று விட்டோம்

விஞ்ஞானம் எமக்காற்றிய நன்மையென்றால்
விண்ணளவென விரைந்துரைப்பீர் ஆனால்
விளைவுகள் அவற்றை வினாக்குறியாக்கி விட்டது
விஞ்ஞானமே வினாக்குறியாகி விட்டது

விண்ணுலகில் வீணே காலம் கழிக்கின்றோம்
மண்ணுலகில் மடிவாரைக் கவனிப்பார் இல்லை
ஆபிரிக்கா அரைவயிறு உணவின்றி அலையும் வேளை
அமெரிக்கா தொடங்கிவிட்டது நட்சத்திரப் போர்த்திட்ட
மதை
விண்ணுலக ஆராய்ச்சி வேண்டாம் என விளக்கவில்லை
மண்ணுலகமக்களின் மலர்ச்சிக்குப் பின் விரைவோமதில்

சலஞ்சர் பொறித்து விட்டது சரித்திரச் சான்றுதனை
சாவுக்கு விஞ்ஞானமும் கருவியென்று
விஞ்ஞானம் வெறி கொண்டால்
விண்ணிலும் மண்ணிலும் சாவுகள் உண்டு

சந்தேகமதிலில்லை வீணே
சரித்திரம் எழுதக் கூட சக்தியற்றவராவோம்
ஏனெனில் சந்ததிக்கும் சமாதி கட்ட
சவக்குழி வெட்டி விட்டோம்.

(யாழ். இந்துக் கல்லூரியில் 1989ஆம் ஆண்டு
விஞ்ஞான ஒன்றுகூடலில் வாசிக்கப்பட்டது.)



92960

# வட நிலத்தவனே

இராமன் தொடுத்தகணையால்
இராவணன் மீது பதிந்ததுளைகளால்
ஈயிருக்க இடமின்றியவன்
உயிர் போனதெனப் புனைந்தான்
கம்பன் தொடுத்த கவிகளில்
அத்துமீறி நீ இங்கு வந்து
ஈந்துவிட்ட ஆட்லெறி ஷெல்களாலே
எத்தனை பிணமிங்கு குவிந்தது
ஈயிருக்க இடமின்றி அவை
சிதைந்து போனது கண்டாய்
வட நிலத்தவனே இந்தியனே
வாலிவதை செய்த கதையை
நீதியென்று கூறு நிலையால்
போலியாகிப் போனதையா
மேதினியில் நீகூறும் நிலை
சூர்ப்பனகை மூக்கறுக்க துணிந்த
வீரர் வர்க்கமன்றோ – நீங்கள்
வந்து இங்கு செய்த வதைகள்
எந்தக் கவி புனைவான் நீதியென்று
வாலி, இராவணன் என்போர்
பட்டியல் போட்ட நீங்கள்
போலியான மேடைப் பேச்சினிலே
வெட்டி வீழ்த்தினீர் தென்னவரை
இதுகால்வரை தென்னவன்
இறந்த கதைதானே உண்டு?
இனியாவது மாறும் நிலை சற்று
வட மன்னவன் சாய்ந்த நிலைகண்டு.

# மலர்ச்செண்டா வரும்?

தீயை அணைக்க நெய்யை
வார்த்த தீயவனே
புலி பசியைத் தீர்க்க
புல்லைத் தெரிந்தெடுத்தவனே
குண்டு பொழிந்து எம் உடலைக் கிழித்து
உணர்வை அழிக்க முனைந்தவனே
எரியும் நெருப்பு உன்னைச்
சுற்றி அணைக்க நாளாவெடுக்கும்?
நீ எறியும் எலும்பேந்த
எச்சில் நாய்களா எம்மக்கள்
புலி பசித்தாலும் புல்லைப்
புசிக்காதென உணர எத்தனை நாளெடுக்கும்?
ஆழியதின் ஆழம்காண ஒலியலை அனுப்பும் காலமிது
நீ வீசும் குண்டு அதற்கு
பதில் மலர்ச் செண்டா வரும்?
துண்டு துண்டாய் எம்முடல்
சிதறும் நிலைகண்டாலும்
பதில் குண்டு கொண்டுதானே
அணைப்போம் உனை நாமும்.

## பூசாவிலுள்ளோர்

குஞ்சுகளுக்காய்
கூடு கட்டல் குற்றமென
கூட்டில் அடைக்கப்பட்ட
குருவிகள்.



# காவல் (சென்றி)

வெட்டை வெளி மீதினிலே
கொட்டும் பனி நடுவினிலே
வாட்டும் ஒளிதனிலே
நட்டநடு ராவினிலே
காவல் இன்னும் தொடர்கிறது

சத்தியமே வெல்லுமென்று
நிச்சயமாய் நம்புகின்ற
வேங்கையணி பாய்கின்றது
காவல் இன்னும் தொடர்கிறது

நெஞ்சுதனில் நஞ்சுமுட்ட
நெற்றி வியர்வை நிலத்தில் சொட்ட
பஞ்சணையில் துஞ்சும் வேளை
சென்றிதனில் நிற்கும் வேங்கை

எதிரி பிணமதைக் குவித்து
அதனாலே அரண் அமைத்து
சரிதம் இதிலே வாழ மறவர்
சாயும் இடம் சென்றிதானே.

## தடா

திக்கெட்டும் புகழ் பரப்ப
தீரமுடன் வாளெடுத்த
தித்திக்கும் தமிழ் வளர்த்த
மூவேந்தர் ஆண்டிட்ட
தென்னாடே உன்னில்
'தடா' வந்ததேனோ?

## நன்றிகள்

எம்.........
மூத்த தலைமுறையே
உனக்கு
நன்றிகள்
ஏனெனில்
எங்களுக்குப் போராட
ஒரு சந்தர்ப்பம்
ஏற்படுத்தித்
தந்ததாலே!

## இலக்குத் தெரிகிறது

தாய்.........
எனும் பாசம்
தந்தை.........
எனும் உறவு
பாவை.........
அவள் பார்வை
எதுவும் என்
வழியில் இல்லை
ஏனெனில்
என் இலக்குத் தெரிகிறது



## இன்னுமா உமக்கிங்கு ம(த)யக்கம்

அந்நிய மோகம் அழிய வேண்டும்
ஆதிக்க வேட்கை ஒழிய வேண்டும்
இனிய ஈழம் எமக்கு வேண்டும்
இன்தமிழ் மதிப்பு மாண்புற வேண்டும்

திண்ணிய தெளிவெண்ணம் எமக்குண்டு
மண்ணிலே வாழ்ந்திடும் உரிமையும் உண்டு
கண்ணினைக் காக்குமுரிமை இமைக்குண்டு
பெண்மையை கவர்ந்திட எவர்க்குரிமையுண்டு

மண்ணிலே வாழ்ந்திட மானமது வேண்டும்
திண்ணிய திடந்தோள் வலியுடன் வேண்டும்
புண்ணிய புருசராய் வாழ்ந்திடல் வேண்டும்
மண்ணிலே இதற்கென்றோர் தாயகம்

அந்நியர்காலடி படலாகாது - எம்
மண்ணிலே அவர் கோலோச்சிட முடியாது
விண்ணிலே விமானம் ஓடிட முடியாது
மண்ணிலே வெறியுடன் நடமாட முடியாது

கன்னித் தமிழ்வளர்ந்த அன்னை ஈழத்தில்
அந்நியர் கூட்டம் கொட்டமடிப்பதா?
அன்னை தங்கை கற்பைக் கொள்ளையடிப்பதா
இன்னுமதைக் கண்டு முழிப்பதா-இல்லை அண்டிப்பிழைப்பதா?

நாங்கள் என்ன சுரணையற்ற நாய்களா?
எங்கள் இளைஞர் என்ன நொண்டிமுடங்களா?
சிங்கள எதிரி எமை மீறிவருவதா?
எங்களின் வீதியில் சிங்களம் உலாவருவதா?

பண்டைத் தமிழர்வம்சம் தந்த தளிர்கள் நாமடா
புறநானூறுகாண் புலிவீரர் நாமடா
செருக்களம் பால் பழங்கள் பருக்குமிடமடா
பாயும் வேங்கை பயிலும் மண்ணடா

எங்கள் மன்னர் முடியாண்ட கதைதெரியும்
எங்கள் முன்னவர் பிடிசாம்பலான கதை தெரியும்
மங்களமாய் வாழ்ந்தவர் வாழ்விழந்த கதைதெரியும்
செங்களம் மீதிலவர் வாழ்ந்த வரலாறு தெரியும்

தொன்று தொட்டு ஆண்ட பரம்பரை
இன்றுமட்டும் மாண்டு போவதா?
மீண்டுமொருமுறை தாழ்ந்து போவதா?
ஆண்ட தமிழர் என்ன கெஞ்சி வாழ்வதா?

இளைஞரே இன்னுமா உமக்கிங்கு மயக்கம்
கிளர்ந்தெழ இன்னுமா உமக்கிங்கு தயக்கம்
அளந்த ஆறடி நிலம் எமக்கென்றுண்டு
இழந்த இறைமைமீட்டிட புதைந்திட வாரீர்!

## உலக அரசியல்

உலக...
அரசியலின் அத்திவாரங்கள்
மனச்சாட்சிகள் புதைந்த
இடங்களில் அல்லவோ
எழுந்தவை?



## சோவியத் யூனியன்

ஓ......
சோவியத் யூனியனே
உன் ராணுவ
கட்டிடம்
பொருளாதாரப் பூகம்பத்தில்
சிக்குண்டு விட்டதே!

## ஜனநாயகத்தின் காவலன்

ஜனநாயகத்தின்
காவலனே
உன்னில்
பலருக்கு மன
நோயாம் —
நீதியரசர்களுக்குமா?

## போர்

போர் .....
ஓ......
அது அநாகரீகமானது
ஆனால்......
நாகரீக உலகில்
அவசியமானது!

## வீக்கம்

ஓ......
திடீர்
பணவீக்கம்......
மனவீக்கம்......
வெடிப்பில் அல்லவோ
முடிவடைகிறது.

## பாலைவனப் புயல்

ஏ......
வல்லரசே
பாலைவனப் புயலில்
சிக்குண்டது
அரபுக்களா?
இல்லையே
உன் மனச்சாட்சியல்லவோ!

## மென்மை

தாமரை இதழ்
மென்மையென்பர்
இல்லை......
தாமரையாள் மேனியது
சிறப்பென்பர்
இவர்கள்......
போராளி மனம்
அறியார்!



## தலைவா

ஓ......
தலைவனே
உன்னை நான்
பாடப் பல
முறை முயற்சித்தேன்
ஆயினும் முடியவில்லை
உடனே......
தமிழன்னை பக்கம்
திரும்பினேன்
தன்னை அவள்
காட்ட மறுத்து
விட்டாள்
ஏன் இந்நிலை?
தன்னில்
உன்னைப் பாட
சொற்கள்
இல்லையாம்!

## புலிவீரன்

மனம் தளரான்
கண் வளரான்
காவலிருப்பான்
மது குடியான்
புகை பிடியான்
சரணடையான்
குண்டணைப்பான்
குப்பி கடிப்பான்
பகை கொன்றொழிப்பான்
மக்கள் மகிழ்வு
கண்டு களிப்பான்
புலிவீரன்.

## உதய காலம்

வானம் சிவந்திருக்கின்றது
வாகனங்கள் விரைகின்றன
வானமும் இரைகின்றது
சூரியன் அஸ்தமிக்கிறது
ஆயினும்......
காகங்கள் கரைகின்றன
'ஷெல்' எனும் சேவல்கள்
கூவிச் செல்கின்றன
புலிவீரர் விரைகின்றனர்
ஆம் .....
இதுவொரு தேசத்தின்
உதய காலம்!

## நாளென்றோ?

ஷெல்லுடைத்த சுவரும்
செல்லரித்த நிலையும்
செ(ஷ)ல் வந்த ஈழத்தின்
செல்வங்களன்றோ
செ(ஷ)ல் வந்த பூமி
செல்வந்த பூமியெனும்
நாளென்றோ?



## இனிக்கின்றது

ஏன்......
எங்கள் வேர்வை
இனிக்கின்றது?
ஓ......
நாம் போராளிகளல்லவா!

## புலிகள்

சாவிலும்
சிரிப்பவர்கள்
புலிகள்!

## காத்திருக்கின்றன

உன்.........
கடைக்கண் பார்வைக்காய்
கல்லூரி நாளில்
ஏங்கிய என் விழிகள் – இன்று
எதிரியின் வரவிற்காய்
ஏக்கமுடன் காத்திருக்கின்றன.

உன்......
கன்னத்தின் மென்மை
உணர விரும்பிய உதடுகள்
வன் நஞ்சினைப் பரீட்சிப்பதற்காய்
காத்திருக்கின்றன.

உன்.....
இதயத்தில் இடம் பிடிக்கத்
துடிதுடித்த என்
இதயவறைகள் – பகை
கதை முடிக்கத் – தன்
துடிப்பை நிறுத்தக்
காத்திருக்கின்றன.

உன்.....
செய்கைகள் அன்று – என்
ஐம்புலன்களையும்
அலைய வைத்தன
ஆனால் இன்று அவை
ஈழவிடிவிற்காய்
ஒருமுகமாய்க்
காத்திருக்கின்றன!

## தீவிரம்

சினிமா நட்சத்திரங்கள் கூட
வாளெடுத்துப் போர் தொடுத்தால்
வாக்குகள் விழுகின்றன
அவர் கால்பிடிப்போரையும்
அவை போய்ச் சேருகின்றன
இது எதைக் குறிக்கிறது?
தமிழர் உதிரமதில்
தீவிரம் கலந்திருப்பதையா......?



92960

## சாவே!

சாவே!
உனக்கொரு சாவில்லையா?
ஏனில்லை.......
களத்திடை புலிவீரர்
வீழ்ந்திட்ட வேளை
நீ......
சாதித்ததெல்லாம்
நின்சாவைச் சந்தித்ததுவே.

## மணலாறு

மணலாறில் உரமான மாவீரா – ஈழ
வரலாறில் வரியான புலிவீரா – கேள்
வீரம் விளையும் மணலாறு – புலி
காலம் கூறும் வரலாறு
போரில் மலரும் ஈழம் – புகழ்
பாரில் பெறும் நிலைபாரு
தோற்று ஓடும் பகை தோழா – புலி
தோற்ற கதை உளதோ?
வேற்றுப் படை தமிழா இங்கு
வென்ற கதை உளதோ?
வேட்டின் இசை கேட்டே – இக்
காட்டில் மலர் மலரும்
காற்றில் வருமெம் மூச்சால் – எதிரி
களத்தில் அனலிடை பஞ்சாம்
ஒற்றையடிப்பாதை கூட – எதிரி
ஓடிவிட்ட கதை கூறும்

823 c

மருளும் மானினக் கண்கள் கூட - இனி
திரளாய் அனல்கள் வீசும்
புலிபுதையும் இடம் இங்கு - எம்
எதிரி சிதையும் வெடி அங்கு
ஞாலத்தின் பார்வை இங்கே
பதிந்த காலம் அன்றே
ஈழத்தின் எதிரி விதிகள்
நிர்ணயமான ஒன்றே
இயற்கையைத் தோழனென
இயம்பிய தானைத் தலைவன்
சேனைகள் வளர்ந்த வனம் இது
இந்திய இராணுவம் பல
நொண்டியான களம் இது
ஈழத்தின் இதயம் இது
கத்தி கைவிடா இந்தியக் கூர்க்கா
கத்தி ஓடிய களம் இது - தன்
கத்தியைப் புற்றிடைப் புகுத்திய வனம் இது
வேங்கை உறுமல் எதிரொலிக்க
வெங்களம் ஆடிய வேளை
கங்கை நாட்டான் இங்கு
பின்னங்கால்கள் பிடரி தொட
நாடியொடுங்கி ஓடி ஒளிக்க
புலி பாடம்புகட்டிய வனம் இது!

92960

னம் சிவந்திருக்கின்றது
கனங்கள் விரைகின்றன
னமும் இரைகின்றது
ியன் அஸ்தமிக்கிறது
ினும்......
கங்கள் கரைகின்றன
ஷல்' எனும் சேவல்கள்
விச் செல்கின்றன
ிவீரர் விரைகின்றனர்
ம......
வொரு தேசத்தின்
ய காலம்!